**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 128/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | **கலையரசன்** |
| Father's / Husband Name | : | முல்லைநாதன் |
| Address | : | கீழப்பெரம்பலூர், குன்னம் வட்டம் |
| Age | : | 33/2025 |

**தேதி : 01.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ட்ரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர். அ.சா.1 ஆனந்தனுக்கு சொந்தமான இருசக்கர வாகனம் கடந்த 16.07.2024ம் தேதி அன்று பெரம்பலூர்அரசு மருத்துவ்னயில் நிறுத்தியிருந்தபோது காணாமல் போய்விட்டது. இது சம்மந்தமாக அ.சா.1 17.07.2024 அன்று பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக பெரம்பலூர் போலீஸார் பெரம்பலூர் ்அரசு மருத்துவமனைக்கு வந்து காணாமல் போன இருசக்கர வாகனம் நிறுத்தியிருந்த இடத்தை வரைபடம் வரைந்தார்கள். அதற்காக நானும், வேல்முருகன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனக்கு அண்ணன் முறை என்றால் சரிதான். பார்வை மகசரில் உள்ள விவரங்களை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் முடியும் வண்டி காணாமல் போனது என்று எழுதியிருந்தார்கள். வண்டி காணாமல் போனதற்காக என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னுடன் வேறு யாரும் கையெழுத்து போட்டார்கள் என்று தெரியுமா என்றால் வேல்முருகன் என்பவர் போட்டார். வேறு யார் போட்டார்கள் என்று தெரியாது. போலீஸார்காவல் நிலையத்தில் வைத்து வெற்றுதாளில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றாலும், அ.சா.1 ஆனந்தன் எனக்கு உறவினர் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.